அம்பத்துூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 33/2023 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 17 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.1 17.06.2026

பெயர் கோவிந்தராஜுலு தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>குறுக்கு விசாரணை</u>:–

1. பிரமாணவாக்குமூலம் மற்றும் பிராது விவரங்கள் படித்துப்பார்துதான் கையொப்பம் செய்தேன். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் என்னை தாவா சொத்தில் இருந்து காலிசெய்யும்படி இடையூறு செய்வதால் தாக்கல் செய்துள்ளேன். எந்த உரிமையில் நான் தாவா சொத்தில் இருக்கிறேன் என்றால் 2009 வருடத்தில் எனது தந்தை எனக்கு அரசு வேலை இல்லாத காரணத்தினால் என்னை தாவா சொத்தில் அனுபவுத்துக்கொள்ளும் படி சொன்னார். தற்போது எனது தந்தை உயிருடன் இல்லை. எனது தந்தைக்கு எவ்வாறு சொத்து உரிமைப்பட்டது என்று எனக்கு தெரியாது. என்னுடன் பிறந்தவர்கள் 5 நபர்கள்.

2. எனது தந்தை 5 நபர்களுக்கும் தனித்தனியாக சொத்து கொடுத்துள்ளார்.

என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது தந்தை எனக்கு செட்டில்மென்ட் செய்துகொடுத்த ஆவணமா என்றால் சரிதான். ( **29.05.2007 தேதியிட்ட செட்டில்மென்ட் ஆவணம் பி.சா.ஆ1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. ஆவணம் சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டதால் நகல் குறியீடுசெய்யப்படுகிறது.** ) எனது தந்தை சொத்தை பிரித்துக்கொடுக்கும்போது தாவா சொத்தை எனது அக்கா 1ம் பிரததிவாதி நீலாவதிக்கு பிரித்துக்கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது தந்தை விவரம் தெரியாமல் கொடுத்தார். எனது தந்தை பி.சா.ஆ1 விவரம் தெரியாமல் எழுதிகொடுத்தாரா என்றால் தெரியாது. எதற்காக மற்ற உடன்பிறப்புகளை சேர்க்காமல் வழக்கை 1ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1ம் பிரதிவாதி தான் இடையூறு செய்தார்.

3. பிரமாணவாக்குமூலத்தில் நான் கொடுத்துள்ள முகவரியை படித்துசொல்ல முடியுமா என்றால் எனக்கு படிக்க தெரியாது. எண் 27, 39 தெரு வெங்கட்ராமன் நகர், கொரட்டூர், என்ற முகவரி என்னுடைய முகவரியா என்றால் ஆமாம். தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் அரசு சொத்து ஆகும். தமிழ் மற்றும் ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அரசாங்கத்தால் தாவா சொத்து 1ம் பிரதிவாதி பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் IA.No.2/2023 in OS.33/2023 மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை.

4. சொத்து சம்மந்தமான அசல் ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் அசல் ஆவணங்கள் எதுவும் இல்லை. தாவா சொத்தில் உள்ள மின்இணைப்பிற்கு கடந்த 6 மாதங்களாக 1ம் பிரததிவாதி கட்டிவருகிறார் அதற்கு முன்பு நான் தான் கட்டியுள்ளேன். மின்இணைப்பு 1ம் பிரதிவாதி

பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். கழிவு நீர், குடிநீர் இணைப்பு 1ம் பிரததிவாதி பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்றால் எதுவும் கிடையாது. தமிழ்நாடு வாழ்வியல் மேம்பாட்டு கழகத்தால் எனது தந்தைக்கு கொடுக்கப்பட்டு, எனது தந்தைக்கு பிறகு எனது அக்கா 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

5. உயர்நீதிமன்றத்தில் நடந்த வழக்கு பற்றி விவரம் தெரியுமா என்றால் தெரியும். WP.No.23488/2025 வா.சா.ஆ 12 ஆக என் தரப்பில் தாக்கல் செய்த ஆவணம் பற்றி எனக்கு தெரியும். ஏற்கனவே எனக்கு பி.சா.ஆ 1 செட்டில்மென்ட் மூலம் சொத்துக் கொடுக்கப்பட்டுள்ளது என்று உத்தரவில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு செட்டில்மென்ட் செய்து கொடுத்த சொத்தின் விலாசம் எனக்கு தெரியாது. நான் அங்கு குடியிருக்கவில்லை. அந்த வீட்டில்இருந்து எனக்கு வாடகை சுமார் மாதம் ரூ6000 வருகிறது. மாதம் மாதம் நான் சென்று வாடகைதாரர்களிடம் இருந்து பணமாக பெற்றுக்கொண்டேன். அந்த வீடு குமரன்நகர் பாடியில் உள்ளது என்றால் சரிதான். நான் முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முழுவிலாசம் தான் தெரியாது என்று சொன்னேன்.

6. எனக்கு செட்டில்மென்ட் கொடுத்த வீட்டில் தான் எனது மனைவி மற்றும் குழந்தைகள் இருக்கிறார்கள் என்றாலும் நான் தனியாக தாவா சொத்தில் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. அந்த வீட்டின் முகவரி எண்121 C குமரன் நகர் பாடி சென்னை 50 என்றால் பாடியில் உள்ளது என்று தெரியும். 2023ல் வழக்கு தாக்கல் செய்யும்போது நான் தாவா சொத்தில் இல்லை என்றாலும் வழக்கு தாக்கல் செய்துவிட்டு சட்டவிரேதமாக தாவா சொத்திற்குள் நுழைந்து தற்போது வரை இருக்கிறேன் என்றால் சரியல்ல. பிறந்ததில் இருந்து தாவா சொத்தில் தான் இருக்கிறேன். செப்டம்பர் 2023ல் Tamil Nadu Slum Board ல் இருந்து நபர்கள்

வந்து தாவா சொத்தை பார்த்தபோது தாவா சொத்தில் நான் இருப்பதாக எந்த குறிப்பும் இல்லை என்றாலும் ஆய்வு செய்ததில் தாவா மனையில் எவரும் வசிக்கவில்லை என்றும் இடிந்த நிலையில் உள்ளது என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

7. தாவா சொத்தின் பிளாட் எண் 93 என்பதை எனது ஆவணங்களில் எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தெரு பெயர் சொல்லியுள்ளேன். 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பிளாட் எண் 93 சொத்தை நான் குறிப்பிட்டு எந்த இடத்தில் நான் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து இடிந்து விழும் நிலையில் இருப்பதால் 1ம் பிரதிவாதி பக்கத்து தெருவில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் அந்த இடிந்துவிழும் நிலையில் உள்ள வீட்டில் தான் வசித்து வருகிறேன். அந்த வீட்டில் வசித்து அபாயம் இருப்பதால் தான் 1ம் பிரதிவாதி அங்கு வசிக்கவில்லை என்றாலும் எனவே தான் நான் தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்தேன் என்றால் சரியல்ல. எனக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் நான் தான் 1ம் பிரதிவாதிக்கு இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல.

8. 1ம் பிரததிவாதி அரசு வேலையில் உள்ளாரா என்றால் இல்லை அவரது கணவர் அரசு வேலையில் உள்ளார். நான் தாவா சொத்தில்அத்துமீறி குடியிருந்து வந்து சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டு 1ம் பிரததிவாதிக்கு இடையூறுசெய்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்திற்கு சம்மந்தமான எந்த கட்டணமும் கட்டாமல் 1ம் பிரதிவாதிக்கு வாடகையும் தராமல் தாவா சொத்தில் வசிக்கிறேன் என்றால் சரியல்ல. மாண்புமிகு உயர்நீதிமன்றம் WP.No.23488/2025 மனு ஆணையில் 1ம் பிரதிவாதிக்கு சொத்தில் உரிமைப்பட்டது என்று உத்தரவு கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அதன் பிறகு

உயர்நீதிமன்றத்தின் ஆணையை மதிக்காமல் நான் தாவா சொத்தில் இருந்து வருகிறேன்என்றால் உத்தரவு பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு சொத்து உரிமைபட்டதால் நான் தாவா சொத்தை காலிசெய்ய விருப்பம் இல்லை.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)